00003

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்வி உயர்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை

**EPC2419 / EPA2419 / ESC2219 –** முன்பிள்ளைப் பருவத்தில் விளையாட்டு

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 01.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. விளையாட்டு என்றால் என்னவென சுருக்கமாக விளக்குக.
2. இளம்பிள்ளைகள் தொடர்பாக விளையாட்டின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.
3. இளம்பிள்ளைகளிடத்தில் நல்ல பழக்கவழக்கங்களை உருவாக்க பொருத்தமான செயற்பாடொன்றை முன்வைக்க.
4. விளையாட்டின் இயல்புகள் **மூன்றினை** (03) எழுதுக.
5. பிள்ளைகளின் உடலியக்கத் திறன்களுக்கு உதவக்கூடிய **இரண்டு** (02) விளையாட்டுச் செயற்பாடுகளை விபரிக்குக.
6. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு பொருத்தமான உடலியக்கச் செயற்பாடுகள் **நான்கினைப்** (04) பட்டியலிடுக.
7. முன்பள்ளிப் பிள்ளைகளின் பேச்சினை விருத்தி செய்ய **இரண்டு** (02) விளையாட்டுச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
8. பிள்ளைகளின் உடல் விருத்திக்குப் பயன்படும் விளையாட்டுக்கள் **இரண்டினைச்** (02) சுருக்கமாக எழுதுக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

i. முன்பள்ளிப் பிள்ளைகளின் விளையாட்டு தொடர்பான பியாஜேயின் கொள்கையை விளக்குகு.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு இந்தக் கொள்கையை முன்பள்ளியில் பயன்படுத்தலாமென உதாரணத்துடன் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. இளம்பிள்ளைகளிடத்தே ஆராய்வு விளையாட்டை விருத்தி செய்ய பொருத்தமான **நான்கு** (04) திறன்களை விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. ஆராய்வு விளையாட்டினை திட்டமிடும் போது முன்பள்ளி ஆசிரியர் கவனத்தில் எடுக்க வேண்டிய காரணிகள் எவை?

**(10 புள்ளிகள்)**

11.

i. "விளையாட்டு பிள்ளையின் மொழி விருத்தியுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளது." இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

ii. முன்பள்ளிப் பிள்ளைகளின் செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான செயற்பாடுகள் **மூன்றினை** (03) உதாரணத்துடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12.

i. புலனியக்க விளையாட்டு என்பதனால் கருதப்படுவது யாது?

**(08 புள்ளிகள்)**

ii. புலனியக்கப் பருவத்தில் பிள்ளைகள் பயன்படுத்தக் கூடிய சாதனங்கள் **ஐந்தினைப்** (05) பெயரிடுக. இச் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பிள்ளைகளிடத்தே விருத்தியடையக் கூடிய திறன்கள்/ எண்ணக்கருக்களை உதாரணங்களுடன் விளக்குக.

**(12 புள்ளிகள்)**

13.

i. "விளையாட்டு, பிள்ளைகளின் அறிவுசார் திறன்களின் படிப்படியான விருத்திக்கு பங்களிக்கின்றது." இது தொடர்பாக முன்பள்ளி ஆசிரியரின் பொறுப்புக்கள் எவை?

**(10 புள்ளிகள்)**

ii. முன்பள்ளி வயதுப் பிள்ளைகளின் விளையாட்டு தொடர்பாக பெற்றோரின் பொறுப்புக்களை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -